DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.40 /2023**

**prosecution witness: Pw 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**A1, A2 present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.C.No./20

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரான்சிஸ் மேரி | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**10.05.2023**

முதல் விசாரணை:

1. நான் இராமேஸ்வரம் எம்ஜிஎஸ் நகரில் வசித்து வருகிறேன். அரசு நடுநிலை பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும்.கடந்த 10.03.2020-ம் தேதி இரவு 11 மணிக்கு நான் என் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் இருவரும் எனது வீட்டின் சுவர் ஏறி குதித்து ஜன்னலை உடைத்து, என்னை பார்த்து தேவடியா என அசிங்கமாக பேசினார்கள்.

2. நான் கதவை திறந்துவெளியே வந்து பார்த்து போது எதிரிகள் இருவரும் கட்டையை வைத்து எனது தலையிலும், முதுகிலும் அடித்தார்கள்.எனது வீட்டில்இருந்த பூந்தொட்டிகளை உடைத்து நீ வாழ்ந்து விடுவாயா, இருந்து விடுவாயா என்று மிரட்டினார்கள். மேலும் அசிங்கமாக பேசி உன் உயிர் எங்கள் கையில் தான் இருக்கிறது என்று கூறினார்கள். உள்ளே எவன்டி இருக்கிறான், எவனுடன் படுத்திருக்கிறாய் என்று கேட்டார்கள். நான் பயந்து கொண்டு நைட்டியுடன் காவல் நிலையம் சென்றேன்.

3. காவல் நிலையத்தில் ஒரே ஒரு காவலர் மட்டும் இருப்பதாகவும், மற்ற காவலர்கள் வெளியில் சென்றுவிட்டதால் காலையில் வந்து புகார் கொடுக்ககுமாறு சொன்னார். அதன்படி நான் மறுநாள் காலையில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. புகார் கொடுக்கும் போது விசாரித்தார்கள், அதற்கு பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. புகார் கொடுக்கும் போது என்னுடைய சகோதரி வரவில்லை. மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் அன்று இரவு நேரம் ஞாபகம் இல்லை. அங்கு பணியில் மருத்துவர் இருந்தார். மருத்துவரிடம் என்னை கட்டையால் தாக்கியதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. புகார் எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் காலை 9 மணிக்கு மேல் சென்றேன் நேரம் ஞாபகம் இல்லை. போலீசார் புகார் சம்பந்தமாக என்னை எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்தது யார் என்றால் நான் குடியிருக்கும் வீட்டு உரிமையாளர் மகேந்திரன் ஆவார். நான் குடியிருக்கும் வீட்டிற்கு கிழக்கு பக்கம் சுவாமி டிரைவிங் ஸ்கூல் உள்ளது என்றால் சரிதான். மேற்கு பக்கம் சந்திர தேவியின் காலி இடம் உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு எதிரே தங்கமணியின் காலி இடம் என்றால் சரிதான்.

3. எனது வீட்டில் ஜன்னல், கண்ணாடிகள் எதுவும் உடையவில்லை, புகாரை மிகைப்படுத்தி கொடுத்துவிட்டேன் என்று போலீசாரிடம் மறு வாக்குமூலம் கொடுத்தீர்களா என்றால் இல்லை கொடுக்கவில்லை.மறுநாள் மதியம் 12 மணிக்கு நான் மருத்துவமனையில் சிகிச்சைக்காக செல்லவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனு கம்பியுட்டரால் டைப் செய்யப்பட்டது என்றால் சரிதான். புகார் மனு யார் டை செய்து கொடுத்தது என்றால் காட்டுபிள்ளையார் கோவிலை சேர்ந்த எனது மாணவனின் கணவர் அவர் வழக்கறிஞர். அந்த புகாரில் நான் கையொப்பம் மட்டும் செய்தேன்.

4. எனது தங்கையின் மூத்த மகள் பெயர் அனுரக்சனா ஆகும். அனுரக்சனாவின் கணவர் தான் கபில்தேவ் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் காதல் திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.1 வது எதிரி பிரான்சிஸ் சவாஸ் எனது தங்கையின் கணவர் என்றால் சரிதான். 2 வது எதிரியும், எனது தங்கையின் மகளும் காதல் திருமணம் செய்ததில் எனக்கும், எனது தங்கைக்கும் உடன்பாடு கிடையாது என்றால் தொடக்கத்தில் இல்லை பின்னர் ராசியாகிக்கொண்டோம். எனது

தங்கை தான் அவரது மகளையும், மருமகனையும் ஏற்றுக்கொண்டார் நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

5. சம்பவ தினத்தன்று கபில்தேவும், அவரது மாமனாரும் எனது தங்கையை பார்க்க வந்து, எனது தங்கை வீட்டில் தான் இருந்தார்கள், என்னை கேட்காமல் 2வது எதிரியை எனது தங்கை ஏற்றுக்கொண்டதால் நான் தான் கோவப்பட்டு புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னை யாரும் தாக்கவும் இல்லை, தகாத வார்த்தையால் பொது இடத்தில் பேசவும் இல்லை, கொலை மிரட்டல் விடவும் இல்லை என்றாலும், 1,2 எதிரிகள் மீது இருந்த கோவத்தினால் பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இந்த எதிரிகளுக்கும், வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**அரசு தரப்பு மறு விசாரணை**

1. புகாரினை தட்டச்சு செய்வதற்கு அதில் உள்ள விபரங்களை நான் எழுதி கொடுத்தேன் அதை பார்த்து அவர் தட்டச்சு செய்தார்.

**எதிரிகள் தரப்பு மறு விசாரணை**

நான் புகாரை கைப்பட எழுதியிருந்தால் நேரடியாக கைப்பட எழுதிய புகாரினையே காவல் நிலையத்தில் கொடுத்திருக்கலாம் என்றால் நான் மூன்று பக்கம் எழுதியிருந்தேன் அதை அவர் குறைத்து டைப் செய்து கொண்டு வந்து கொடுத்தார்.